**FQE** Register No. | | | | | | | | |

**5081–21**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A.B.L./B.A. LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Second Year – Third Semester

**FAMILY LAW – I**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**
**பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

1. "The Hindu Adoptions and Maintenance Act, 1956 has secularized the law of adoption" – Examine.
''1956-ஆம் ஆண்டு இந்து மகவேற்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், மகவேற்பு சட்டத்தை மத சார்பற்றதாக ஆக்கியுள்ளது'' - ஆராய்க.

2. State the grounds available to a Muslim wife for securing divorce under the provisions of the Dissolution of Muslim Marriage Act, 1939.
1939-ஆம் ஆண்டு முகமதிய திருமணக் கலைப்புச் சட்டத்தின் கீழ் மணமுறிவு பெறுவதற்கான ஒரு முகமதிய பெண்மணிக்கான காரணங்களை எடுத்துரைக்க.

3. Explain the powers and duties of a natural guardian of a minor under the Hindu Minority and Guardianship Act, 1956. Differentiate the natural guardian from a de facto guardian.
1956-ம் ஆண்டு இந்து இளவர் மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஒரு இளவரின் இயற்கை காப்பாளரின் உரிமைகளையும் கடமைகளையும் விளக்கி, இயற்கை காப்பாளரை நிகழ்வு நிலை காப்பாளரிடமிருந்து வேறுபடுத்துக.

4. "The sacramental nature of a Hindu marriage has been completely changed by modern legislation" – Elucidate.
''ஒரு இந்துத் திருமணத்தின் புனிதத் தன்மையை இன்றைய புதிய சட்டம் முற்றிலும் மாற்றி அமைத்து விட்டது'' - ஆராய்க.

5. Define "Acknowledgement of paternity". State the conditions for a valid acknowledgement of paternity and the legal effects of it.
''தந்தை நிலை ஏற்பு'' என்பதை வரையறு. ஒரு செல்லத்தக்க தந்தை நிலை ஏற்பிற்குண்டான முக்கிய நிபந்தனைகளையும் அதன் சட்ட விளைவுகளையும் எடுத்துக் கூறுக.

**PART B** — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :**
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக :

(a) Sapinda relationship
சபிந்தா உறவு முறை.

(b) Natural guardian under Mohammedan Law
முகமதிய சட்டத்தின் கீழ் இயற்கை காப்பாளர்.

(c) Specified dower
குறிப்பிடப்பட்ட மணக்கொடை.

(d) Divorce by mutual consent under Hindu law.
இந்து சட்டத்தில் இருமன இசைவு மூலம் மணமுறிவு.

(e) Fasid Marriage.
பாசி திருமணம்.

(f) Mithakshara School
மிதாக்ஷரா பயில் நெறியம்.

(g) Doctrine of Factum Valet
செய்து விட்டதால் செல்லுவதாம் என்னும் கோட்பாடு.

(h) Doctrine of relation back.
முன்மேவுக் கோட்பாடு.

(i) Mohd. Ahmed Kahn *v.* Shah Banu
முகமத் அஹமத் கான் எதிர் ஷாபானு.

(j) Illatom adoption
இல்லாட்டம் தத்தெடுப்பு.

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Baskar adopted a son in 2005. After two years, he faced financial crisis and he is unable to maintain the adopted son. He decided to give his son for adoption to another. Discuss its validity.
பாஸ்கர் என்பவர் 2005-ல் ஒரு மகனை மகவேற்பு செய்கிறார். இரண்டு வருடத்திற்கு பிறகு அவர் பணப் பிரச்சனையை சந்திக்க நேர்ந்ததால் அவரால் மகவேற்பு செய்த மகனை பராமரிக்க முடியவில்லை. அதனால் மகனை மற்றவருக்கு மகவேற்பு செய்ய தீர்மானிக்கிறார். அதனுடைய செல்லும் தன்மையினை விவரி.

8. Kala is the wife of Murugan. She is unable to procreate a child. So she gives her consent to her husband for a second marriage without the dissolution of marriage. Whether such second marriage is valid? Decide.
கலா என்பவர் முருகனுடைய மனைவியானவர். அவள் குழந்தையினை ஈன்றெடுக்க முடியாதவள். அதனால் தனது கணவனுக்கு இரண்டாவது திருமணம் செய்வதற்கு, திருமண கலைப்பு செய்யாமல் அனுமதி அளிக்கிறாள். இரண்டாவது திருமணம் செல்லக்கூடியதா? தீர்வு செய்க.

9. The immovable property of a Mohammedan minor is sold by the mother as guardian. Is the sale valid?
ஒரு முகமதிய இளவரின் அசையா சொத்தை அவனுடைய காப்பாளராகிய தாய் விற்று விடுகிறார். அந்த விற்பனை செல்லுமா?

10. 'A' marries 'B', a woman undergoing Iddat at the time of marriage. Is the marriage valid?
'ஆ' என்ற பெண் இத்தா இருக்கும் சமயம் 'அ' என்பவர் அவரை திருமணம் செய்து கொண்டார். அத்திருமணம் செல்லுமா?

11. 'A' a Hindu bachelor adopts and then marries. The wife dies leaving stridhana property. The adoptee and the husband are the only claimants. Decide.
'அ' என்ற திருமணமாகாத இந்து ஒருவர் மகவேற்பு செய்த பின்னர் திருமணம் புரிந்தார். அவரது மனைவி சீதன சொத்துக்களை விட்டு விட்டு இறந்து விடுகிறார். மகவேற்பு செய்யப்பட்டவரும் அப்பெண்ணின் கணவருமே அச்சொத்தில் உரிமை கோருகிறார்கள். முடிவு காண்க.

12. 'Paul', employed in Chennai, married 'Rita' who is employed in Madurai. Rita insisted 'Paul' to resign his job to live with her in Madurai. Paul refused. Rita filed a divorce petition. Decide.
சென்னையில் வேலையிலிருக்கும் 'பால்' என்பவர் மதுரையில் வேலையிலுள்ள 'ரீட்டா' என்ற பெண்ணை மணம்புரிந்தார். 'பால்' தன் வேலையை இராசிநாமாச் செய்து விட்டு மதுரையில் தன்னோடு வாழ வேண்டும் என்று 'ரீட்டா' வற்புறுத்தினார். அதனை 'பால்' மறுத்தார். 'ரீட்டா' மணமுறிவிற்கான மனுவினை தாக்கல் செய்தார். முடிவு காண்க.

———————